செ.வெ.எண் : 14 நாள் : 12.05.2020

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் பரவுதலை தடுக்கும் பொருட்டு கடந்த 24.03.2020 முதல் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு பொதுமக்களின் நடமாட்டத்தை கட்டுபடுத்தவும், தனி மனித சமூக இடைவெளியை பொதுமக்கள் பின்பற்றவும், முக கவசம் கட்டாயம் அணியவும் கடும் நடவடிக்கைகள் தொடர்ந்து தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. மாநில பேரிடர் மேலாண்மை சட்டம் 2005ன் படி தற்போது அமுலில் உள்ள ஊரடங்கு மற்றும் இதர கட்டுப்பாடுகள் அனைத்தும் 17.05.2020ஆம் தேதி நள்ளிரவு 12.00 மணி வரை தொடர்ந்து நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. தமிழக அரசு வெளியிட்ட அறிவுரைகளின்படி அரியலூர் மாவட்டத்தில் பல்வேறு பணிகளுக்கு வரைமுறைகளுடன் அனுமதி அளிக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக அரியலூர் மாவட்டத்தில் நோய்க் கட்டுப்பாட்டு பகுதிகள் தவிர கீழ்க்காணும் பணிகள், 11.05.2020 திங்கள்கிழமை முதல் குறிப்பிட்ட நேரத்தில் செயல்பட அனுமதி அளிக்கப்படுகிறது.

அரியலூர் மாவட்டத்தில் அனைத்துப்பகுதிகளிலும் (நோய்க் கட்டுப்பாட்டு பகுதிகள் தவிர) தேனீர் கடைகள் (Tea Shops) பார்சல் சேவைக்கு மட்டும் காலை 6 மணி முதல் இரவு 7 மணி வரை செயல்பட அனுமதிக்கப்படுகிறது. தேனீர் கடைகளில் சமூக இடைவெளியை தவறாமல் கடை பிடிக்க வேண்டும். மேலும், தினமும் 5 முறை கிருமிநாசினி தெளித்து, கடையை சுத்தமாகவும் சுகாதரமாகவும் வைத்துக் கொள்ள வேண்டும். கடையில் வாடிக்கையாளர்கள் நின்றோ, அமர்ந்தோ, ஏதும் உட்கொள்ள அனுமதி இல்லை. இதை முறையாக கடைபிடிக்க தவறும் தேனீர் கடைகள் உடனடியாக மூடப்படும்.

அரியலூர் மாவட்டத்தில் அனைத்துப்பகுதிகளிலும் உள்ள பெட்ரோல் பங்க் காலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை செயல்படும். தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் உள்ள பெட்ரோல் பங்க் 24 மணி நேரமும் செயல்படும்.

அரியலூர் மாவட்டத்தில் அனைத்துப்பகுதிகளிலும் உள்ள தனியார் நிறுவனங்கள் 33 சதவிகித பணியாளர்களுடன் காலை 10 மணி முதல் மாலை 7 மணி வரை செயல்படும்.

தனிக்கடைகளாக செயல்படும் கட்டுமான ஹார்டுவேர் கடைகள், சிமெண்ட் கட்டுமான பொருட்கள் விற்பனை கடைகள், சானிடரிவேர் கடைகள், மின்சாதன பொருட்கள் விற்பனை கடைகள் அரியலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் காலை 10 மணி முதல் இரவு 7 மணி வரை செயல்படும்.

செல்போன், விற்பனை மற்றும் பழுது நீக்கம் செய்யும் கடைகள், கணிப்பொறி கடைகள், வீட்டு உபயோக பொருட்கள், மோட்டார்கள், கண்கண்ணாடி விற்பனை கடைகள் அரியலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் காலை 10 மணி முதல் இரவு 7 மணி வரை செயல்படும்.

ஊரக பகுதிகளில் உள்ள தனிக்கடைகள் (சலூன் கடைகள், அழகு நிலையங்கள் தவிர) காலை 10 மணி முதல் இரவு 7 மணி வரை செயல்படும்.

அரசால் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட அனைத்து தளர்வுகளும், தடைகளும் மறு உத்தரவு வரும் வரை தொடர்ந்து முழுமையாக கடைபிடிக்கப்படும்.

கொரோனா நோய்த் தொற்றின் தாக்கத்தை கட்டுப்படுத்த மாவட்ட நிர்வாகம் எடுத்து வரும் பல்வேறு நடவடிக்கைகளுக்கு பொதுமக்களும், தனியார் நிறுவனங்களும் முழு ஆதரவும், ஒத்துழைப்பும் நல்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**